| | | |
|---|---|---|
| தி.ந.ச.வெங்கடரங்கன் | மணியம் | வா.மு.சே.கவிஅரசன் |
| இந்தியா | சிங்கப்பூர் | அமெரிக்கா |
| **தலைவர்** | **செயல் இயக்குநர்** | **துணைத் தலைவர்** |


**INFITT thanks the Tamilnadu Government for adopting suitable encoding standards for Tamil and proposes steps to be taken to promote Tamil Computing further.**

Chennai, 27th Jun 2010

International Forum for Information Technology in Tamil (INFITT), the global body of the Tamil computing experts and enthusiasts, thanks the Government of Tamilnadu for accepting Unicode as the main encoding standard and TACE - 16 as the only alternative encoding standard for Tamil computing. INFITT also recommends ways to promote Tamil computing and carry the spirit of continuity in Tamil.

During the ninth Tamil Internet Conference, held on June 23 - 27, 2010 (TI 2010) along with the World Classical Tamil Conference, the Government of Tamilnadu, accepting the recommendation of INFITT, has issued a G.O. announcing a historic decision.

The G.O. (Ms) No. 29, dated 23/06/2010, states that the government has decided to migrate from the existing 8-bit encoding systems such as TAB/TAM to 16-bit encoding. The government formulates to use Unicode as the main 16-bit encoding "to be used in all applications where support for Tamil is available" and use TACE - 16 (Tamil All Character Encoding) as the only alternative encoding "where support for Unicode is not available partially or fully."

The G.O. also pinpoints all relevant technical considerations and guidelines to be followed for the standards to ensure a seamless usage across the various types of uses, especially for e-governance.

INFITT wholeheartedly welcomes this move and sincerely thank the Honourable Chief Minister of Tamil Nadu Dr. Kalaignar M Karunanidhi for accepting its recommendations based on the convergence resolution of INFITT and for acting immediately by issuing the G.O.

Such an issuance of G.O has resolved one of the major areas of concern to use Tamil in computers, internet and digital devices. INFITT's recommendation to the Government makes the slogan of "Engum Thamizh, Ethilum Thamizh" a reality, as it enables Tamil to be used in all print and digital media with no complication or loss of data.

Along with its earlier recommendations on encoding, INFITT has recommended to the Government to set up a state of the art research center for Computational Linguistics and Language Technology with special reference to Tamil at the University of Madras to focus on Tamil research and to develop high level Language Technologies in the fields of speech recognition, handwriting recognition, and machine translation. INFITT is of the firm view that appropriate measures have to be taken now and that the establishment of such center is the right step towards next level of activities promoting Tamil computing, as the intractable issues of font standardization had been resolved for the better.

Prof.N.Deivasundaram of the University of Madras said: "An Advanced Centre for Computational Linguistics and Language Technology with special reference to Tamil should be established at University of Madras to develop Modern Tamil from its evergreen classical language status to the much needed electronic language status – as a language suitable for all computing tasks to meet the expectations and challenges of globalization as well as to help in bridging the gap in Tamil society existing due to the "digital divide".

INFITT also appeals to the Governments of Tamilnadu, Sri Lanka, Singapore and Malaysia to introduce learning of Tamil digital input methods as part of Tamil curriculum in the schools. This move would make Tamil students know Tamil typing at an early age and enable them to use Tamil over the Net and Digital devices. This will make a huge impact on the younger generation that is otherwise feared of losing interest in Tamil.

| திரு.ந.ச.வெங்கடரங்கன் | மணியம் | வா.மு.சே.கவிஅரசன் |
|---|---|---|
| இந்தியா | சிங்கப்பூர் | அமெரிக்கா |
| **தலைவர்** | **செயல் இயக்குநர்** | **துணைத் தலைவர்** |

On conclusion of the event, the INFITT chair Mr. T.N.C.Venkatrangan said: "Language, technology and linguistics experts from countries such as Singapore, Malaysia, Sri Lanka, Canada, the USA, Britain, South Korea and Germany besides all over India participated in great enthusiasm in TI2010. Several hundred scholars and participants from the World Classical Tamil Conference too attended the Internet Conference sessions and learned the developments happening in the area of language computing and possibilities. On behalf of INFITT we sincerely thank Government of Tamil Nadu for the historic event"

Tamil Internet 2010 was also a great experience for the experts and users alike. The conference was attended by over 500 delegates and observers. Over 110 papers were read in 4 halls, over the 4 days. The conference proceedings containing all the papers, numbering 900 pages, were released as a book and in an electronic CD format. The Tamil Internet Exhibition was attended by a huge number of Tamils, exceeding a hundred thousand over the five days.

அச்சிற்கான செய்தி வெளியீடு

பொருத்தமான குறியேற்றுத் தரங்களை ஏற்றுக்கொண்ட தமிழ்நாடு அரசிற்கு நன்றிகளைத் தெரிவித்து, தமிழ்க் கணிமையை மேலும் வளர்க்கும் படிகளை உத்தமம் முன்னுரைக்கிறது.

சென்னை, 27 ஜூன் 2010

தமிழ்நாடு அரசு அண்மையில் யுனிக்கோடை(Unicode) முக்கியக் குறியேற்றத் தரமாகவும், தமிழ் அனையெழுத்து குறியீட்டை (TACE 16) ஒரே மாற்றுக் குறியேற்றுத் தரமாகவும், ஏற்றுக் கொண்டதற்குத் தமிழ்க் கணிமை வல்லுநர், ஆர்வலர் அடங்கிய உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றம். (உத்தமம்) நன்றி தெரிவிக்கிறது. அதோடு, எதிர்காலத்திற் தமிழ்க்கணிமையை வளர்ப்பதற்கும், தமிழ்த்தொடர்ச்சியைக் உயிரோட்டத்தோடு கொண்டு செல்லவும் ஆன வழிமுறைகளை இந்நிறுவனம் பரிந்துரைக்கிறது.

ஜூன் 23-27, 2010 தேதிகளில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டோடு நடந்த ஒன்பதாவது தமிழ் இணைய மாநாட்டில் (தமிழ் இணையம் 2010) உத்தமத்தின் பரிந்துரையை ஏற்று, வரலாற்று முடிவெடுத்து தமிழ்நாடு அரசு ஓர் அரசாணையை வெளியிட்டது.

23/06/2010 இல், (Ms) எண். 29, என்று வெளிவந்த அந்த அரசாணையின் படி, தமிழ்நாடு அரசு தன் செயற்பாடுகளில், இப்போதிருக்கும் TAB/TAM போன்ற 8-

மடைக் குறியேற்றங்களில் இருந்து 16 மடைக் குறியேற்றத்திற்கு நகர முடிவு செய்திருக்கிறது. இனி வருங்காலங்களில் ”எந்தெந்தப் பயனாக்கங்களில் யுனிக்கோடின் (Unicode) வழி தமிழைப் பயன்படுத்த வகையிருக்கிறதோ, அங்கு அதையே முக்கிய 16 மடைக் குறியேற்றமாய்க் கையாள்வது” என்றும், ”எங்கெல்லாம் யுனிக்கோட்டிற்கான பின்னூக்கம் அமையவில்லையோ அங்கு தமிழ் அனையெழுத்துக் குறியேற்றத்தைப் (TACE-16) பயன்படுத்துவது” என்றும் திட்டமிட்டிருக்கிறது.

பல்வேறு பயன்பாடுகளின் போது, குறிப்பாக மின்னாளுமையின் போது, எந்த நெருடலுமின்றிப் பயனாகும் வகையில் இந்தத் தரங்ளோடு பின்பற்ற வேண்டிய நுட்ப விவரங்களையும், வழிமுறைகளையும் இந்த அரசாணை குறிப்பிட்டுச் சொல்கிறது.

இந்த செயற்பாட்டை உத்தமம் முழுமனத்தோடு வரவேற்கிறது. அதோடு தன்னுடைய ஒருங்கமைத் தீர்மானத்தின்வழி தெரிவித்த பரிந்துரைகளை ஏற்று உடனடியாக அரசானை இயற்றிச் செயற்பட்ட மாண்புமிகு முதல்வர் முனைவர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களுக்கு உளப்பூர்வமாக நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

இப்படி ஒரு அரசாணை வெளியிட்டதால், தமிழைக் கணினி, இணையம், மற்றும் எண்மவழிக் கருவிகளிற் பயன்படுத்துவதில் இருந்த முக்கியத் தயக்கத்தை அரசு முடிவிற்குக் கொண்டுவந்திருக்கிறது. எல்லா அச்சு, எண்மவழி ஊடகங்களில் எந்தக் குழப்பமும் வராமலும், தரவுகள் தொலையாமலும் தமிழ் வெளியீடு

அமையும்படி அரசிற்கு உத்தமம் அளித்த பரிந்துரை இருப்பதால் “எங்கும் தமிழ், எதிலும் தமிழ்” என்ற சொலவம் உள்ளமையாகிறது.

ஏற்கனவே கொடுத்த பரிந்துரைகளோடு, இன்னொரு பரிந்துரையாகத் தமிழை மையப் படுத்திக் கணினி மொழியியலிலும், மொழி நுட்பியலிலும் ஆய்வு செய்யும் வகையில் ஓர் உயர்மையத்தைச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நிறுவும் படித் தமிழ்நாடு அரசை உத்தமம் கேட்டுக் கொள்கிறது. மொழியியலிலும், கணியறிவியலிலும் ஆய்வு வளர்ச்சிப் பணிகள் செய்வது, பேச்சுணரி, கையெழுத்துணரி, எந்திர மொழிபெயர்ப்பு போன்ற உயர்மட்ட மொழிநுட்பியல்களை உருவாக்கப் பெரிதும் பயன்படும். இதுநாள் வரை தீர்க்கப்பட முடியாதிருந்த குறியேற்றச் சிக்கல்களுக்கு நல்முடிவு எடுத்த நிலையில், கணினி மொழியியலுக்குத் தேவையான அளவீடுகளை இனி எடுக்கவேண்டும் என்றும், அப்படி ஒரு மையத்தை நிறுவுவது தமிழ்க்கணிமையின் அடுத்த மட்டச் செயற்பாட்டிற்கு முன்னெடுக்கும் சரியான படிக்கல் என்றும் உத்தமம் உறுதியாகக் கருதுகிறது.

இது பற்றிச் சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ந.தெய்வசுந்தரம் ”தமிழை மையப் படுத்திக் கணினி மொழியியலிலும், மொழி நுட்பியலிலும் (Language Technology) ஆய்வு செய்யும் உயர்மையத்தைச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நிறுவுவதன் மூலம் என்றும் இளமையோடிருக்கும் தமிழைச் செம்மொழி நிலையில் இருந்து நவீன மொழியாக, இன்று தேவைப்படும் மின்னியியல் மொழியாக, வளர்க்க முடியும். மேலும் நம் மொழியை எல்லாக் கணிமைச் செயல்களுக்கும் உகந்ததாய், உலகமயமாக்கலின் எதிர்பார்ப்புக்களுக்கும் சவால்களுக்கும் இணங்குவதாய், இன்று தமிழ்ச் சமுதாயத்தில் இருக்கும்

“தகவல்நுட்பியல் இடைவெளிக்குப் பாலம் அமைப்பதாய்க் கொண்டு செல்ல முடியும்” என்று கூறினார்.

மேலே கூறிய ஆய்வு மையத்தோடு அல்லாது, உத்தமம் வேறொரு வேண்டுகோளையும் இந்த நேரத்தில் விடுக்கிறது. அதாவது, பள்ளிகளில் தமிழ்க் கல்விப் பாடத்தோடு, கணினியில் தமிழ் உள்ளிடச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு, இலங்கை, சிங்கப்பூர், மலேசிய அரசுகளை உத்தமம் வேண்டிக் கொள்கிறது. இந்த முனைப்பு இளம் அகவையிலேயே தமிழ் மாணவர் தமிழ்த் தட்டச்சு செய்வதற்கும், இணையம், எண்மவழிக் கருவிகளில் தமிழ்ப் பயன்பாட்டைப் பெருக்குவதற்கும் வகைசெய்யும். அதன்மூலம், தமிழின் மேல் விருப்பம் குறைந்து கொண்டிருக்கும் இளம் தலைமுறையினருக்குப் பெருந்தாக்கத்தை அளிக்கும்.

நிகழ்ச்சி முடிந்த பொழுது, ”நடந்து முடிந்த தமிழ் இணையம் 2010 இல் சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, கனடா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், தென்கொரியா, ஜெர்மனி ஆகிய நாடுகளையும், இந்தியாவின் பல பகுதிகளையும் சேர்ந்த மொழி, மொழியியல், நுட்பியல் வல்லுநர்கள் பெருத்த ஆர்வத்தோடு பங்கு கொண்டார்கள். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, கூடவே நடந்த உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் பங்குகொண்ட நூற்றுக்கணக்கான அறிஞர்களும் பேராளர்களும் பார்வையாளர்களும் இணைய மாநாட்டில் கலந்து கொண்டு மொழிக்கணிமையின் வளர்ச்சிகளையும், இனிமேலும் நடக்கக் கூடிய வாய்ப்புக்களையும் தெரிந்து கொண்டார்கள். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இவ்வளவும் நடப்பதற்கு உறுதுணையாய் இருந்த தமிழ்நாடு அரசிற்கு உத்தமம்

தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறது." என்று உத்தமத்தின் தலைவர் தி.ந.ச.வெங்கடரங்கன் கூறினார்.:

தமிழிணையம் 2010 எல்லா வல்லுநர், ஆர்வலர்களுக்கும் பெரும் பட்டறிவைக் கொடுத்தது. இம்மாநாட்டில் 500 பேராளர்களும், பார்வையாளர்களும் கலந்து கொண்டனர். இது தவிர, 110 கட்டுரைகளும் 900 பக்கங்களும் அடங்கிய மாநாட்டு நடப்புகள் ஒரு பொத்தகமாகவும் மின்னியியல் குறுவட்டாகவும் வெளியிடப்பட்டன. தமிழ் இணைய மாநாட்டை யொட்டி நடந்த கண்காட்சியை பல லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் கண்டு களித்தனர்.